**அ.வ.எண்: 51/2022** **நாள்: 21.03.2024**

வா.சா.1 தேவப்பன்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது எங்கு குடியிருக்கிறேன் என்றால் திருப்பாக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தெரியுமா என்றால் வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என கூறியுள்ளேன். எனது அப்பா எங்கு இறந்தார் என்றால் திருப்பாக்கோட்டையில் 1992ம் வருடம் இறந்தார். நிரூபணவாக்குமூலத்தில் எனது அப்பா எங்கு இறந்தார் என சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

2. எனது தந்தைக்கு முதல் தாரம் மனைவி யார் என்றால் சிங்கம்மாள். நான் சிங்கம்மாளின் மகன். எத்தனை பேருக்கு வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்தேன் என்றால் 9 பேருக்கு தாக்கல் செய்துள்ளேன். இரண்டு தாரத்தின் குழந்தைகளுக்கும் சேர்த்துத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நாங்கள் வாதிகளின் வாரிசுகள் என்பதற்கு எந்த விதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. 5 முதல் 8 வரையிலான வாதிகள் எனது அப்பாவின் 2ம் தாரத்தின் குழந்தைகள் என்றால் சரியல்ல. 5,8,10,11 இரண்டாம் தாரத்தின் வாரிசுகள். எனது அப்பாவுக்கு இரண்டாவது திருமணம் எப்போது செய்தார்கள் என்று தெரியாது.

3. வட்டாட்சியரிடம் வாரிசு சான்றிதழ் கேட்டு யார் மனு கொடுத்தது என்றால் நான்தான் கொடுத்தேன். நான் வாதிகளின் பிறப்பு சான்றிதழ்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வட்டாட்சியர் அலுவலகத்தில் என்னை நீதிமன்றத்தை நாடி பரிகாரம் தேடிக் கொள்ள அறிவுறுத்தியதின் பேரில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். முதன்மை செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண். 11/17

ந.க.எண்.வ.நி.5(3) (180/2017) நாள்.09.08.2017 சுற்றறிக்கையின் படி ஒன்றிற்கு மேற்பட்ட கணவன் மனைவி உள்ள இனங்களில் வட்டாட்சியர் வாரிசு சான்றிதழ் வழங்க இயலாது எனவும் சொல்லி உரிய நீதிமன்றத்தில் பரிகாரம் தேடி கொள்ள அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான். எனது அப்பாவுக்கும் 2 மனைவிகள் என்பதால் நீதிமன்றத்தை நாடி பரிகாரம் தேடிக் கொள்ள சொன்னார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்..**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
தேவகோட்டை.